**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 131** **நாள்: 06.03.2026**

**அம்பத்தூர் மண்டலம் தாங்கல் ஏரி பூங்காவில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கப்பட்ட படகு குழாம் மக்களுக்கு மிகச்சிறந்த பொழுதுப்போக்குத் தளமாக அமைந்துள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சி அம்பத்தூர் மண்டலம், வார்டு-83, மதனங்குப்பம் பிரதான சாலை, கள்ளிக்குப்பம் தாங்கல் ஏரி பூங்காவில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள படகு குழாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 04.03.2026 அன்று மக்கள் பயன்பாட்டிற்குத் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்த தாங்கல் ஏரியானது 64,749 சதுர மீட்டர் பரப்பளவிலான இடத்தில் 47,434 சதுர மீட்டர் பரப்பளவில் 15 அடி ஆழத்தில் அமைந்துள்ளது. இந்த ஏரி 21,68,68,248 லிட்டர் நீர் சேமிப்பு கொள்ளளவு கொண்டது. இதில் 1168 மீ நீளத்தில் சுற்றுச்சுவர், 3582 சதுர மீட்டர் நடைபாதை, 8853 சதுர மீட்டர் பரப்பளவில் பசுமைப் பகுதி, 4376 சதுர அடி பரப்பளவில் திறந்தவெளி மற்றும் விளையாட்டுப் பகுதி, 490 சதுர மீட்டர் பரப்பளவில் பெண்கள் உடற்பயிற்சி மற்றும் யோகா செய்வதற்கான பகுதி, வாசிப்புப் பகுதி ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த ஏரியில் படகு குழாமில் 2 படகுத் துறைகள், 4 மிதிவண்டி படகுகள், 2 மீட்புப் படகுகள், 40 உயிர் காப்புச் சட்டைகள், 28 பூங்கா மேசைகள், ஆண்கள் மற்றும் பெண்களுக்கான 10 கழிப்பறைகள், 7 எண்ணிக்கையில் தண்ணீர் உள்ளேறும் குழாய், 2 எண்ணிக்கையில் தண்ணீர் வெளியேறும் குழாய், 12 மீட்டர் உயரம் கொண்ட 1 உயர்கோபுர மின்விளக்கு, 16 மீட்டர் உயரம் கொண்ட 1 உயர்கோபுர மின்விளக்கு, 37 எண்ணிக்கையில் தெருமின் விளக்குகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஏரியில் அமைக்கப்பட்டுள்ள படகு குழாம் பொதுமக்களுக்கு மிகச்சிறந்த பொழுதுப்போக்கு தளமாக அமைந்துள்ளது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**